1994 ஜனவரி 5]

பேர்களுக்கு நிரந்தரப் பணி அளிக்கப் பெற ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *173*, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

173–

திருத்துறைபூண்டி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் ஆசிரியர்கள் நியமித்தல்.

***13316–திரு ஜி. பழனிசாமி :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகபட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நியமிக்கப்படுவர் ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மாணவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு விதிகளின்படியும் அரசின் நிதி நிலைமைக்கேற்பவும் கூடுதல் பணியிடங்கள் வழங்கும் போது இப்பள்ளியில் கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மாணவர்களுடைய எண்ணிக்கையின் அடிப்படையில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதாகக் கூறினார்கள். ஆனால் ஒவ்வொரு வகுப்பறைகளிலும், 120 முதல் 140 வரை பயிலக் கூடிய மாணவியர்களுக்கு ஒரே ஆசிரியர் பாடம் நடத்தக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அந்தப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் மொத்தமாக 8 ஆசிரியர் இடங்கள் காலியாக இன்றைய தினம் இருக்கின்றன. எனவே, அந்தக் காலி இடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு கீழ்க்கண்டவாறு கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் தேவைப்படுகின்றன என்று கருத்துரு அனுப்பப்பட்டு இருக்கிறது. அங்கே ஒரே ஒரு தமிழ்

ஆசிரியை இடம் மட்டும் தான் காலிப் பணியிடமாக வைக்கப்பட்டு இருக்கிறது. மற்றும் 7 பணியிடங்கள் தேவை என்ற கருத்துரு வந்திருக்கிறது. நிதிநிலை காரணமாக அரசால், ஒவ்வொரு ஆண்டும் குறைந்த எண்ணிக்கையிலேயே பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் இடைநிலை ஆசிரியர்கள் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றன. கூடுதல் மாணவர்கள் சேர்க்கை அடிப்படையில் அனைத்துப் பள்ளிகளின் தேவையையும் முழுமையாக நிறைவு செய்திட இயலவில்லை. நிதிநிலை காரணமாக கடந்த சில ஆண்டுகளாக அரசால் தமிழ் ஆசிரியை பணியிடங்கள் மற்றும் ஆசிரியர் அல்லாதோர் பணியிடங்கள் ஏதும் அனுமதிக்கப்படவில்லை. எனினும் பல்வேறு பள்ளிகளில் உபரியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களைக் கண்டறிந்து, அவைகளை ஆசிரியர் பணியிடங்கள் தேவையான பள்ளிக்கு மாற்றவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் திருத்துறைப்பூண்டி அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கும் ஆசிரியர் பணியிடங்களை மாற்றித் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதால்தான் பெற்றோர் சங்கம் மூலமாக அவர்களுக்கு, பெண் ஆசிரியைகளுக்கு சம்பளம் கொடுக்கப்பட்டு தொடர்ந்து ஆசிரியர்களை நாங்கள் அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். தொடர்ச்சியாக பெற்றோர் சங்கத்தால் கொடுக்க முடியவில்லை. அந்தப் பள்ளியே ஒரு நெருக்கடியான பள்ளி. நான் கூட அமைச்சரிடத்திலே சொல்கிற போது,அதற்காக 3 ஏக்கர் நிலத்தை இலவசமாக, வாங்கித் தருகிறேன் என்று சொல்லி, 5 லட்சம் பெறுமானமுள்ள இடங்களுக்கான பத்திரத்தைக் கூட அவர்களிடத்திலே நான் கொடுத்திருக்கிறேன். இடமும் பற்றாக்குறையாக உள்ளது. அங்கே உள்ள இடத்தில் கீற்றுக் கொட்டகைகள் பெற்றோர் சங்கத்தாலே ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றன. இப்படிப்பட்ட பணிகளை நாங்கள் செய்கிறபோது, ஆசிரியர் பணியிடங்களையாவது நிரப்பி, அந்தக் காலி இடங்களை பூர்த்தி செய்து தர உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.55

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர்–ஆசிரியர் கழகத்தின் மூலமாகத்தான் தமிழ்நாட்டில் பல்வேறு பள்ளிகளில் இன்று ஆசிரியர் பற்றாக்குறை ஓரளவிற்கு நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. திருத்துறைப்பூண்டி அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளிக்குத் தேவையான ஆசிரியர்கள் முழுமையாக அளிக்கப்பட முடியாவிட்டாலும் உபரியாக இருக்கின்ற

1994 ஜனவரி 5]

இடங்களைக் கண்டறிந்து அவற்றை இந்தப் பள்ளிக்கு மாற்றித் தருவதற்கு அரசு உடனடி முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 174, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

174–

மாவட்டத் தலைநகரங்களில் தொழிலாளர் நீதிமன்றங்கள் அமைத்தல்.

21450*–திருமதி கே. மரியம் உல் ஆசியா :**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

தமிழ்நாட்டில் மாவட்ட தலைநகரங்களில் தொழிலாளர் நீதிமன்றங்கள் துவக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே:

தற்போது கீழே குறிப்பிட்டுள்ள 8 மாவட்ட தலைநகரங்களில் தொழிலாளர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:

1. சென்னை, 2. மதுரை, 3. கோவை, 4. வேலூர் 5. சேலம், 6. திருச்சி, 7. கடலூர், 8. திருநெல்வேலி. இது தவிர, சென்னையில் இரண்டு கூடுதல் தொழிலாளர் நீதிமன்றங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில் தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் தொழிலாளர் நீதிமன்றம் துவக்க அரசிடம் எந்தச் செயற்குறிப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடிக் கிடந்த தொழிற்சாலைகளைத் திறந்து வைத்து, தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் ஒளியை ஏற்றிவைத்து, தொழிலாளர்களுடைய நலனுக்காக அக்கறையோடு செயல்பட்டு வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் தொழிலாளர்கள் முதற்கொண்டு தமிழக மக்கள் அனைவரும் பாராட்டுகின்ற இந்த வேளையில் தேங்கிக் கிடக்கின்ற அந்த தொழிலாளர்களுடைய வழக்குகளை உடனுக்குடன் விசாரித்து, தொழிலாளர்களுக்கு நலம் பயக்கும் வகையில், அந்தத் தீர்ப்பு தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் வகையில் அரசு இதில் தலையிட்டு அந்த வழக்குகளை விசாரித்து, தீர்ப்பு வழங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.